**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 63 /2021**

**Deposition of P.W.** 5

Name : அனிஷ்

S/o, D/o, W/o : சாமிக்குட்டி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 20.08.2025**

A2, A3 Present. A1 absent petition filed and allowed.

**முதல் விசாரணை–**

நான் அதங்கோட்டில் வசித்து வருகிறேன். நான் பனியன் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 10.09.2018ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சுவாமியார்மடம் பாரில் வைத்து சம்பவ இடத்தை வரைந்து கொண்டிருந்தார்கள். அப்போது கையெழுத்துபோட சொன்னார்கள். கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

டாஸ்மார்க் கடைக்கு வெளியே சாலையில் கோடு போட்டார்கள். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்குத் தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு போகவும் இல்லை, சொன்ன இடத்தில்

போலீசார் கையொப்பம் பெறவில்லை என்றும் நான் அங்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வீடு சுவாமியார்மடத்திலிருந்து சுமார் 25 கி.மீ தூரத்தில் உள்ளது.